# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

### இந்திய - இலங்கை சுற்றுலா இணைப்பு

"இந்திய இலங்கை சுற்றுலா இணைப்பு: கங்கை முதல் களனி வரையான நட்புறவு, ஆராய்ச்சியின் நற்பயணம்" என்ற தலைப்பிலான சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வொன்றினை கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் 2025 நவம்பர் 19 ஆம் திகதி கொழும்பில் ஒழுங்கமைத்திருந்தது.

2. ஆய்வுகளை புரிந்து கொள்ளுதல், வர்த்தக செயற்பாடுகளை மெச்சுதல், தொழில்நுட்ப பயன்பாடுகளை கண்டறிதல் ஆகியவை தொடர்பான முக்கிய கவனத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலாத்துறை தொடர்புகளை சிறந்த முறையில் மேம்படுத்தும் நோக்குடன் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இலங்கை வெளியுறவுத் துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

3. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணங்களை ஒழுங்கமைக்கும் முகவர்கள், விருந்தோம்பல் துறை சார்ந்த வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட இலங்கை சுற்றுலாத் துறையின் முக்கிய தரப்புகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தன. அதேவேளை ஆய்வுகள், தொழில்நுட்பத்துறை மற்றும் வர்த்தக நாமங்களை ஊக்குவிக்கும் நிறுவனங்கள் உள்ளிட்ட தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்திய இந்திய நிபுணர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

4. இந்திய அரசாங்கத்தின் சுற்றுலாத்துறை அமைச்சின் இணைச் செயலர் திரு ஹரிகிஷோர் எஸ் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தியிருந்த அதேசமயம், சுற்றுலாத்துறை சார்ந்த விளக்கக்காட்சி ஒன்றிணையும் சமர்ப்பித்திருந்தார். அவரது உரையில் இந்தியாவின் பரந்த சுற்றுலாத்துறை தோற்றப்பாடுகள், சுற்றுலாத் துறை சார்ந்த வர்த்தக நாமங்களின் வளர்ச்சி மற்றும் இந்தியா முழுவதும் மலிவானதும் சொகுசானதுமான பயணங்களை இலங்கை சுற்றுலா பயணிகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

5. அத்துடன் இலங்கை சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்கு மத்திய பிரதேசம் மிகவும் முக்கியமான தெரிவாக இருக்கும் எனவும் இங்கு குறிப்பிடப்பட்டது. இதேவேளை மத்திய பிரதேச மாநிலத்தின் சுற்றுலா அபிவிருத்தி கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி டி இளையராஜா அவர்கள் தலைமையிலான மத்திய பிரதேச மாநில அரசைச் சேர்ந்த பேராளர்கள் குழு ஒன்றும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தது. இந்நிகழ்வின் பக்க நிகழ்வுகளாக முன்னணி வாய்ந்த விருந்தோம்பல் நிறுவனங்கள் மற்றும் மகாபோதி சங்கத்தினருடன் பல்வேறு சந்திப்புகள்

ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் இராமாயண கலைஞர்கள் மற்றும் கதை கூறும் வல்லுனர்கள் உட்பட்ட தரப்பினருடன் வட்டமேசை கலந்துரையாடல்களும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

6. இந்தியாவின் பயண மற்றும் டிஜிட்டல் துறை சார்ந்த அமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கும் MakeMyTrip மற்றும் Paytm ஆகியவை இந்நிகழ்வில் பங்கேற்றதுடன் பயணிகளின் நடத்தை, டிஜிட்டல் கட்டணங்கள் மற்றும் வளர்ந்து வரும் நுகர்வோர் செல்நெறிகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டன. IIT Madras சுற்றுலாவிற்கான அதன் Augmented and Virtual Reality (VR) செயலிகளை இங்கு காட்சிப்படுத்தியது. இது இந்தியாவின் புகழ்பெற்ற இடங்கள் ஊடாக அதிவேக பயணங்களை வழங்குகிறது.

7. இணைப்பை மேம்படுத்துதல், தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், மற்றும் ஊக்குவித்தல் மூலம் சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா மற்றும் இலங்கை கொண்டிருக்கும் பொதுவான உறுதிப்பாட்டை இந்த நிகழ்வு வெற்றிகரமாக சுட்டிக்காட்டியது.

************

**கொழும்பு**
**20 நவம்பர் 2025**